யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
JAFFNA HINDU COLLEGE

| 60 | T | I |
|---|---|---|

முதலாந் தவணைப் பரீட்சை - 2017

1st Term Examination - 2017

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்
Business and Accounting studies

நேரம் / Time: 3மணித்தியாலம்

தரம் / Grade: 10

பகுதி / Part: I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1) , 2) , 3) , 4) என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான எனக் கருதப்படும் விடையைத் தெரிவு செய்க.
- பின்வரும் விடய ஆய்வில் கவனம் செலுத்தி 1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்கு விடை தருக.

க.பொ.த உயர்தரத்தில் கற்றுவெளியேறிய ராஜன் என்பவர் சிற்றுண்டி வகைகளை தயாரித்து விற்பனை செய்யும் சிற்றுண்டிச்சாலை ஒன்றினை "ராஜன் சிற்றுண்டி அகம்" என்ற பெயரில் சந்தைப்பகுதி ஒன்றில் ஆரம்பித்தார். சிற்றுண்டி விற்பனை நிலயத்தை நடாத்துவதற்காக பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டடத்தை வாடகைக்கு அமர்த்தினார். ராஜனுடைய பெயரில் இவரது தந்தையார் நிலையான வைப்பிலிட்ட 1,000,000 ரூபாவை மீளப்பெற்று முயற்சியில் மூலதனமாக ஈடுபடுத்தினார். ராஜன் ஆரம்பித்த இவ்வியாபார நடவடிக்கைக்கு தந்தையார் உதவி செய்வதாகவும் உறுதியளித்தார்.

1. இவ்விடய ஆய்வில் குறிப்பிட்ட "ராஜன் சிற்றுண்டியகம்" எந்த அடிப்படைத் தேவையை நிறைவு செய்கின்றது?

   1) உணவு  2) உடை  3) வீடு  4) கல்வி

2. "ராஜனுடைய தந்தையார் அவருக்கு உதவி செய்வதாக உறுதியளித்துள்ளார்" இக்கூற்று எதனைக் குறிப்பிடுகின்றது.

   1) வணிகத்தில் வாய்ப்பு ஒன்று காணப்படுகிறது
   2) வணிகத்தில் பலம் ஒன்று காணப்படுகின்றது.
   3) வணிகத்தில் பலவீனம் ஒன்று இருக்கின்றது.
   4) வணிகத்தில் அச்சுறுத்தல் ஒன்று காணப்படுகின்றது.

3. இது எவ்வகை வணிக அமைப்பாக அழைக்கப்படுகிறது?

   1) பங்குடமை  2) தனியாள் உரிமை  3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி  4) கழகங்கள்

4. மேலே தரப்பட்ட ராஜன் சிற்றுண்டியகம் தொடர்பான பிழையான கூற்று எதுவாகும்?

   1) இது ஒரு பொருள் உற்பத்தி நிறுவனமாகும்.
   2) இந்நிறுவனம் எச்சந்தர்ப்பங்களிலும் பதிவு செய்யப்பட வேண்டும்.
   3) இந்நிறுவனத்திற்கு சட்ட ஆளுமை இருக்கின்றது.
   4) இவ்வணிகத்தினால் உழைக்கப்படும் இலாபம் முழுவதும் உரிமையாளரையே சேரும்.



kalvi.lk

5. ராஜன் தனது நிலையான வைப்பிலிருந்து மீள எடுத்தல் என்பது எந்த வகையான உற்பத்திக் காரணியாகும்?

1) நிலம் 2) உழைப்பு 3) மூலதனம் 4) முயற்சி

6. "மக்கள் தங்களுடைய மிகை உற்பத்தியை ஏனைய தரப்பினருடன் தொடர்புபட்டு தமக்குத் தேவையான ஏனைய பண்டங்களை பெற்றுக்கொள்ளுதல்" எந்த வகையான வியாபாரத்தினைக் குறிப்பிடுகின்றது?

1) தனிவியாபாரம் 2) பண்டமாற்றுவியாபாரம் 3) சில்லறைவியாபாரம் 4) மொத்தவியாபாரம்

7. வணிகம் என்ற பதம் தொடர்பாக பிழையான கூற்று பின்வருவனவற்றுள் எதுவாகும்?

1) வணிகம் என்பது ஒரு பொருளாதார நடவடிக்கையாகும்.

2) வணிகம் என்பது பொருள்கள், சேவைகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்தல்

3) தற்கால சமூகத்திலுள்ள எல்லா வணிகங்களும் இலாப நோக்கமுடையவையாகும்

4) வணிகம் மனித தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்கின்றன.

8. ...................................... என்பது வணிகத்தில் பொதுவாகக் காணப்படக்கூடிய ஒரு நோக்கமாக இருப்பதோடு ............................ என்பது வணிகத்தின் ஒரு துணை நோக்கமாகக் கருதப்படுகின்றது.

சரியான ஒழுங்கில் மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்கு பொருத்தமானதாக இடைவெளியில் காணப்படுபவை எவையாகும்.

1) இலாபம் உழைத்தல், நுகர்வோரது தேவைகள் விருப்பங்களைத் திருப்தி செய்தல்.

2) நுகர்வோரது தேவைகள் விருப்பங்களை பூர்த்தி செய்தல், இலாபம் உழைத்தல்.

3) தொழில் வாய்ப்பை ஏற்படுத்தல், தொழிலாளர் நலன்கள்

4) இலாபம் உழைத்தல், தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்

9. பொருள் உற்பத்தி வணிகங்கள் பின்வருவனவற்றில் எதனைக் கருத்திற்கொள்ளாமல் பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து வழங்குகின்றன?

1) நுகர்வோரின் பல்வேறு வகையான சுவைகள் 2) நுகர்வோரின் வருமான மட்டம்

3) நுகர்வோரின் சமூக அந்தஸ்து 4) நுகர்வோரின் கல்வி அறிவு

10. பின்வருவனவற்றுள் சேவை உற்பத்தி வணிகமாகக் கருதப்பட முடியாதது எதுவாகும்?

1) மொத்தவியாபார வணிகம் 2) உணவு தயாரிக்கும் தொழிற்சாலை

3) சிகை அலங்கரிப்பு நிறுவனம் 4) வங்கிகள்

11. வணிகமொன்றில் இடம்பெறும் உடல், உளரீதியான பங்களிப்புக்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

1) நிலம் 2) உழைப்பு 3) மூலதனம் 4) முயற்சி



kalvi.lk

12. வணிகத்திற்கு வளங்களை வழங்கும் தனிநபர் அல்லது குழுவொன்றினை எவ்வாறு அழைப்பர்?

1) உரிமையாளர்கள் 2) முகாமையாளர்கள் 3) வாடிக்கையாளர்கள் 4) வழங்குனர்கள்

13. வணிகத்தின் மீது அக்கறை செலுத்துவோர்களில் பெறவேண்டிய வரி வருமானங்களைச் சேகரித்தல் , தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்துதல், தேசிய உற்பத்திகளை அதிகரித்துக்கொள்ளல் போன்ற நோக்கங்களை உடையவர்கள் யார்?

1) அரசு 2) நிதிநிறுவனங்கள் 3) முகாமையாளர்கள் 4) உரிமையாளர்கள்

14. பின்வருவனவற்றில் முகாமையாளர்களிடமிருந்து வணிகமொன்று எதிர்பார்க்கும் பங்களிப்புக்கள் எவையாகும்?

1) தேவையானளவு மூலதனப் பங்களிப்பை வழங்கல் , வரிச்சலுகைகளை வழங்கல்

2) வணிகத்திட்டத்தை சரியான முறையில் செயற்படுத்துதல் , சரியான தீர்மானமெடுத்தல்.

3) உரிய நேரத்தில் மூலப்பொருள்களை வழங்கல், சரியான மூலப்பொருட்களை தருவித்தல்.

4) தனக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்ளும், தொழிலாளர் திறனை அதிகரித்தலும்.

15. வணிகக் கருமங்களை தமது சொந்த தேர்ச்சியையும் திறனையும் பயன்படுத்தி நிறைவேற்றும் நபர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?

1) ஊழியர்கள் 2) வாடிக்கையாளர்கள் 3) வழங்குனர்கள் 4) முகாமையாளர்கள்

16. பின்வருவனவற்றுள் எது அரசியல் சூழல் எனக்கருதப்படுகிறது?

1) வட்டிவீதம் 2) 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச்சட்டம்

3) வேலைவாய்ப்பு மட்டம் 4) உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கொள்கை

17. பணவீக்கம் , அந்நிய செலாவணிவீதம், வருமானமட்டம் ஆகியவை வணிகத்தைப் பாதிக்கும் சில காரணிகள் ஆகும். இக்காரணிகள் எச்சூழல் ஆகும்?

1) பொருளியல் சூழல் 2) சட்டச்சூழல் 3) பூகோளமயச்சூழல் 4) தொழிநுட்பச் சூழல்

18. எச்சூழலைக் கற்பதன் மூலமாக வணிகமொன்றின் பலம், பலவீனம் இரண்டையும் இனங்கண்டு கொள்ளலாம்?

1) அரசியல்சூழல் 2) வணிகச்சூழல் 3) உள்ளகச்சூழல் 4) பூகோளச்சூழல்

பின்வருவன எமது நாட்டில் காணப்படுகின்ற சில வணிக அமைப்புக்களின் பெயர்கள் ஆகும்.

அ – குமாரசாமி புடவையகம்

ஆ – சாமுவேல் அன் கம்பனி

இ - வரையறுக்கப்பட்ட வடமாகாண தனியார் பத்திரிகை நிறுவனம்

ஈ - இலங்கைப் புகையிரதத் திணைக்களம்

உ - இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

ஊ – நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

19. மேலே தரப்பட்டவற்றில் அரசதுறையிலுள்ள இரண்டு வணிக அமைப்புக்கள் எவை?

1) அ , இ    2) இ , உ    3) ஈ , உ    4) இ , ஈ

20. பின்வருவனவற்றில் வரையறுக்கப்படாத பொறுப்பு, சட்டஆளுமை இன்மை ஆகிய இரண்டு பண்புகளைக்கொண்ட வணிகஅமைப்புக்கள் இரண்டு எவை?

1) அ , இ    2) அ , ஆ    3) ஆ , ஊ    4) இ , ஈ

21. இயக்குனர் சபை மூலமாக நிர்வகிக்கப்படும் இரண்டு வணிக அமைப்புக்கள் எவை?

1) இ , ஈ    2) அ , ஊ    3) அ , இ    4) ஆ , ஈ

22. கணக்கீட்டின் பிரதான நோக்கமாக இருப்பது எது?

1) வணிகமானது போதுமான அளவு இலாபத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளதா என்பதனை அறிந்து கொள்ளல்.

2) அக்கறை செலுத்தும் பிரிவினருக்கு வேண்டிய தகவல்களை வழங்குதல்.

3) வணிகத்தின் நிதிநிலமை திருப்திகரமாகக் காணப்படுகிறதா என்பதனை அறிந்து கொள்ளல்.

4) சட்டத்தேவைகளை நிறைவு செய்து கொள்ளல்.

23. வணிகமொன்றுக்கும் வேறு பிரிவினர்களுக்கும் இடையே நடைபெறும் வளங்களின் கைமாற்றம் எவ்வாறு அழைக்கப்படும்?

1) சொத்துக்கள்    2) பொறுப்புக்கள்    3) நிதிக்கணக்கீடு    4) கொடுக்கல் வாங்கல்கள்

24. உரிமையாண்மை என்பது எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது?

1) கடந்தகாலக் கொடுக்கல் வாங்கல் ஒன்றின் பெறுபேறாக உருவாகுதல்.

2) வணிகமொன்றின் உரிமையாளருக்கு உரித்தான சொத்தின் பெறுமதி.

3) வணிகத்திற்கு உரித்தான சொத்துக்களின் பெறுமதி.

4) வணிகத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற வளங்கள்.

25. நடைமுறையல்லாச் சொத்துக்களை உதாரணமாகக் குறிப்பிடப்படுபவை எவை?

1) காசு, வங்கி மீதி வருமதிகள் , இருப்பு

2) காணி கட்டடங்கள், காசு வருமதிகள்

3) இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், இருப்பு, வங்கி மீதி

4) காணிகட்டடங்கள், மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள்



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

## பகுதி – II

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) பின்வரும் விடய ஆய்வினை பயன்படுத்தி 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.

ரகுமான் என்பவர் 01.01.2017ல் சந்தைப்பகுதிக்கு அண்மையில் அமைக்கப்பட்டிருக்கும் 1000,000 ரூபா பெறுமதியான தனது சொந்தக்கட்டடத்தில் ஆண்கள், பெண்களுக்குரிய ஆடைகளைத் தைக்கும் வணிகமொன்றை "எம்.ஆர்.ரகுமான் தையல் நிலையம்" என்ற பெயரில் ஆரம்பித்தார். அதே நாளில் அவர் தனது சொந்த சேமிப்பான 500,000 ரூபாவை மூலதனமாக இட்டு உடைகளைத் தைப்பதற்கு இருவரை வேலைக்கமர்த்தினார். 10.01.2017ல் 100,000 ரூபாவைக் கடனாகப் பெற்று இரண்டு தையல் இயந்திரங்களையும் வாங்கினார். சாதாரண மக்கள் , பாடசாலை மாணவர்கள் அவருடைய நிலயத்தில் ஆடை தைப்பதற்கு வருகை தந்தனர். அவர் தனது நாளாந்த வருமானங்களை ஏற்கனவே தான் நடைமுறைக்கணக்கொன்றை திறந்துள்ள வங்கியில் வைப்புச் செய்தார். ஒவ்வொரு தையல்காரருக்கும் 20,000 ரூபா வீதம் அம்மாதத்திற்குரிய சம்பளத்தை காசோலை மூலம் வழங்கினார்.

1. அ) "எம்.ஆர்.ரகுமான் தையல் நிலையம்" என்ற பெயரில் மேலே குறிப்பிடப்பட்ட வணிக நிறுவனம் எந்த வகையைச் சார்ந்தது?

   ஆ) இது பொருளுற்பத்தி வணிகமா அல்லது சேவை உற்பத்தி வணிகமா?

2. இந்நிறுவனம் பதிவு செய்யப்பட வேண்டுமா? இல்லையா? காரணம் ஒன்று கூறுக?
3. இவ்வகை நிறுவனமொன்றுக்குள்ள 2 அனுகூலங்களையும் 2 பிரதிகூலங்களையும் எழுதுக.
4. பருமன் அடிப்படையில் இந்நிறுவனத்தை வகைப்படுத்துக. காரணம் ஒன்று தருக?
5. இந்நிறுவனத்தில் காணப்படும் நடைமுறைச்சொத்து ஒன்றினையும் நடைமுறையல்லாச் சொத்து ஒன்றினையும் குறிப்பிடுக.
6. இந்நிறுவனத்தில் காணப்படும் நடைமுறையல்லாப் பொறுப்பினை குறிப்பிடுவதோடு அதன் பெறுமதியினையும் தருக?
7. இந்நிறுவனத்தில் இடம்பெற்ற வருமானம் ஒன்றினதும் செலவீனம் ஒன்றினதும் பெயரினை எழுதுக?
8. 01.01.2017ல் எம்.ஆர்.ரகுமான் தையல் நிலயத்தின் உரிமையாண்மை எவ்வளவு?
9. நிறுவனம் வங்கியிலிருந்து கடன்பெற்றதன் பின்னர் கையிலுள்ள காசைக் கணிப்பிடுக.
10. இந்நிறுவனத்தின் உரிமையாண்மையைப் பாதிக்கும் இரண்டு கொடுக்கல் வாங்கல்களை தந்து அவை எவ்வாறு அதனை மாற்றியமைக்கும் என்பதனையும் குறிப்பிடுக.

2) 1. மனிததேவைகள் , விருப்பங்கள் அகியவற்றுக்கிடையிலான 2 வேறுபாடுகள் தருக?

2. பொருளுற்பத்தி வணிகங்கள் பல்வேறு விடயங்களை கவனத்திற் கொண்டு பல்வேறு பண்டங்களை சந்தைக்கு வழங்குகின்றன. அவற்றில் இரண்டைக் குறிப்பிடுக.
3. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா எனக்கூறுக.

   அ) அரச துறையிலுள்ள எல்லா வணிக அமைப்புக்களும் இலாபநோக்கற்றவை.

   ஆ) தரமான பொருட்களை நியாய விலையில் பெற்றுக்கொள்வதே வாடிக்கையாளரின் பிரதான நோக்கமாகும் .

   இ) வணிகமொன்றின் நடவடிக்கைகளை செயற்படுத்தும் தனிநபர்களை முகாமையாளர்கள் என்பர்.



kalvi.lk

ஈ) வணிகத்திட்டத்தை சரியானமுறையில் செயற்படுத்துதல் , சரியான தீர்மானம் எடுத்தல் போன்றவை உரிமையாளரிடமிருந்து வணிகம் எதிர்பார்க்கும் பங்களிப்புக்கள் ஆகும்.

4. ஊழியர்களிடமிருந்து வணிகமொன்று எதிர்பார்க்கும் இரண்டு பங்களிப்புகள் எவை?

5. அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் என்ற பதத்தினை விளக்குக. அவற்றுக்கு நான்கு உதாரணங்கள் தருக?

3) 1. தனியார்துறை வணிக அமைப்புக்கள் என்பதால் விளங்கிக்கொள்வது யாது?

2. அரச கூட்டுத்தாபனங்களின் நான்கு அனுகூலங்கள் எவை?

3. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா எனக் குறிப்பிடுக.

அ) இலாபநோக்கற்ற வணிகஅமைப்புக்கள் தனியார் துறையில் மாத்திரம் இயங்குகின்றன.

ஆ) தனியாள் உரிமை வணிகம் நாடு முழுவதும் அதிகமாகக் காணப்படுகின்ற ஒரு நிறுவனமாகும்.

இ) எழுத்து மூலமான பங்குடமை ஒப்பந்தம் பங்குடமை உறுதி எனப்பெயர் பெறும்.

ஈ) கூட்டுறவுச்சங்கங்கள் இயக்குனர் சபை ஒன்றினூடாக நிர்வகிக்கப்படுகிறது.

4. வணிக அமைப்புக்கள் பதிவு செய்வதனால் கிடைக்கும் அனுகூலங்கள் 4 தருக?

5. கூட்டிணைக்கப்பட்ட கம்பனியிலுள்ள பண்புகள் 4 தருக.

4) 1. கணக்கீடு என்றால் என்ன?

2. காசுக்கொடுக்கல் வாங்கல் என்றால் என்ன?

3. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா எனக் கூறுக.

அ) கணக்கீட்டின் மூலம் அக்கறை செலுத்தும் பிரிவினருக்கு வழங்கப்படும் அறிக்கைகள் நிதி அறிக்கைகள் எனப்படும்.

ஆ) வருமானங்கள் உரிமையிலிருந்து கழிக்கப்படுகின்றன. செலவீனங்கள் உரிமையுடன் சேர்க்கப்படுகிறன.

இ) வருமானம் மூலம் மாத்திரம் உரிமையில் அதிகரிப்பு ஏற்படுகின்றன.

ஈ) வருமானம் அல்லது செலவீனங்களுக்கிடையே உள்ள வேறுபாடு இலாபம் அல்லது நட்டம் ஆகும்.

4. பின்வரும் தகவல்களை சொத்து, பொறுப்பு, உரிமையாண்மை, வருமானம், செலவீனம் என்ற தலைப்புக்களில் வகைப்படுத்துக.

சம்பளம், மின்சாரம், விற்பனை, வங்கிக்கடன், கட்டடங்கள், மூலதனம், இருப்பு, கடன்கொடுநர்

5. வணிகமொன்றில் 500,000 ரூபா பெறுமதியான கட்டிடம் , 200,000 ரூபா பெறுமதியான தளபாடங்கள், 300,000 ரூபாவிற்கு வங்கிக்கடன் போன்றவை காணப்படுகின்றன. இவ்வணிகத்தின் உரிமையாண்மையைக் கணிப்பிடுக.



kalvi.lk

ONLINE CLASSES - 2025

*May*

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**